**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.**

**தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு, ஜூன் / ஜூலை– 2023**

**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தல் மற்றும் மறுகூட்டல் – II /மறுமதிப்பீடு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

ஜூன் / ஜூலை **2023**, தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வெழுதி விடைத்தாட்கள் ஒளிநகல் கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் விடைத்தாட்களின் ஒளிநகல்களை **31.10.2023** நண்பகல் **12** மணி முதல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்கு சென்று Notification என்பதை Click செய்தால் திரையில் தோன்றும் **Diploma in Elementry Education** என்ற வாசகத்தினை Click செய்து பின்னர் **DEE Exam June / July - 2023 scan pdf downloading** வழியாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு மறுகூட்டல் (Retotalling) / மறுமதிப்பீட்டிற்கு (Revaluation) விண்ணப்பிக்க விரும்பினால் இதே இணையதள முகவரியில் **Revalution/Retotal - II application form DEEE** என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். இவ்விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, விண்ணப்பத்துடன் அதில் குறிப்பிட்டுள்ள கட்டணத் தொகையை கீழ்க்குறிப்பிட்ட நாட்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் நேரடியாக செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.

விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள்: **01.11.2023** முதல் **02.11.2023** வரை

| வ. எண் | தேர்வர் வகை | கட்டணம் | கட்டணம் செலுத்தும் இடம் |
|---|---|---|---|
| 1 | விடைத்தாளின் மறுகூட்டல் – IIக்கு விண்ணப்பிப்பவர்கள் | ஒரு பாடத்திற்கு ரூ.205/– செலுத்த வேண்டும். | தேர்வர் வசிக்கும் மாவட்டத்திற்கு அருகில் அமைந்திருக்கும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். |
| 2 | விடைத்தாளின் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பவர்கள் | ஒரு பாடத்திற்கு ரூ.505/– செலுத்த வேண்டும். | |

ஓம்/
இயக்குநர்

நாள்: **30.10.2023**